Your Friends in Finance
SHABRA
61, New Bullers Rd.
COLOMBO-6

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்-

சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 24 உ செவ்வாய்க்கிழமை திருவள்ளுவர் ஆண்டு ... (06 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-154

### தூதரகங்களுக்குப் பந்தோபஸ்து

# கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு

## ரோந்து, சோதனை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 6

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்தியத் தூதரகத்தில் மட்டுமன்றி, ஏனைய வெளிநாட்டுத் தூதரகங்களிலும் ஆயுதப் படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை நகரில் ஆயுதப்படைகளின் ரோந்தும், சோதனைகளும் திடீரென அதிகரித்துள்ளன.

கொழும்பில் இந்தியத் தூதரகம் மற்றும் இந்திய நிறுவனங்களுக்கும் பெருமளவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியத் தூதரக வளவினுள் இந்தியப் படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு இந்தியத் தூதரகத்துக்கு இலக்கு வைத்து வீசப்பட்ட கிரனேட் ஒன்று அருகில் இருந்த அமெரிக்கத் தூதரகக் கட்டடம் மீது விழுந்து வெடித்தது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

**உரிமை கோரல்**

இதனிடையில் கிரனேட் தாக்குதலுக்கு இனந்தெரியாத முஸ்லிம் அமைப்பு ஒன்று உரிமை கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள பத்திரிகை ஸ்தாபனம் ஒன்றிற்கு தொலைபேசி மூலம் உரிமை

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நேற்றுக்காலை நுணுவில் மட்டுவில், கைதடி பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டன. இதனால் கண்டி வீதியில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. வாகனங்கள் அனைத்தும் நாவற்குழி தனங்கிளப்பு ஊடாக சாவகச்சேரிக்கு வந்து பிரயாணங்களைத் தொடர்ந்தன. [ஓ-117-10]

### கடைகள் திறக்கப்பட்டன

பச்சிலைப்பள்ளி, ஜூன் 6

பளை நகரப்பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் அனைத்தும் நேற்று திறக்கப்பட்டிருந்தன.

இந்த வியார நிலையங்கள் கடந்த முதலாம் திகதிமுதல் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. [ஓ-117]

### தடைகள் நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

மீசாலை புத்தூர் சந்தி முகாம், சாவகச்சேரி முகாம் ஆகியவற்றின் முன்னுலுள்ள கண்டி வீதி போக்குவரத்துத் தடைகள் நேற்று அகற்றப்பட்டுவிட்டன. [ஓ-117]

### திருமலையில் கையெழுத்து இயக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

இந்திய அமைதிப்படை வெளியேறக்கூடாது எனக் கோரி திருகோணமலையில் கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களிடம் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இவ்வாரம் முழுவதும் 'பாஸ்' வழங்க ஒழுங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 6

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் உட்பட இரு சில்லு வாகனங்களுக்குரிய 'பாஸ்' இந்தக் கிழமை எல்லா நாட்களிலும் காலை 9 மணிமுதல் நண்பகல் 1-30 மணி வரை வழங்கப்படும்.

'பாஸ்' பெறுவதற்கு பெரும் எண்ணிக்கையானோர் வருவதைக் கருத்திற்கொண்டு மூன்று நாள் மட்டும் என்ற முந்திய ஏற்பாடு இந்த வாரத்தில் நீக்கப்படுவதாக அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள்களுக்கு நேற்று முதல் 'பாஸ்' வழங்கப்படுகின்றன.

மேற்படி 'பாஸ்' பெற்றுக்கொள்வதற்கு நூற்றுக்கணக்கான வாகன உரிமையாளர்கள் கச்சேரியடியிலும் மணிக்கூட்டுக் கோபுரத்தடியிலும் கியூ வரிசையில் நின்றனர்,

இதேவேளை 'பாஸ்' பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வாகனத்துடன் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் கோரப்படுகின்றன.

## பேர்னுட் பிரதமர் ராஜீவை சந்தித்துப் பேசினர்

புதுடில்லி, ஜூன் 6

இலங்கை வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. பேர்னுட் திலகரத்தின நேற்று மாலை பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திந்துப் பேசினர்.

திரு. திலகரத்தின இன்று வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

முன்னர் கிடைத்த செய்திகளின் படி—

பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து ஜனாதிபதி பிரேமதாஸாவின் செய்தியைக் கையளிப்பதற்கு இலங்கை வெளியுறவு அமைச்சுச் செயலாளர் பேர்னுட் திலகரத்தின தமக்குத் திங்கட்கிழமை (நேற்று) சந்தர்ப்பம் தரும்படி புதுடில்லி வெளியுறவு அமைச்சைக் கேட்டிருந்தார்.

திரு. திலகரத்தின திங்கட்கிழமை பிரதமர் காந்தியைச் சந்திக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது பற்றி கூறமுடியாதிருப்பதாக வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## ஆரம்ப ஆசிரியர் நியமனம்; தமிழ்ப் பகுதிகளில் இடைநிறுத்தம்?

யாழ்ப்பாணம், ஜூன் 6

தமிழ்ப் பகுதிகளில் ஆரம்ப ஆசிரியர் நியமனங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இதே வேளை அண்மையில் சேவைக்கால முன் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களுக்கும் நியமனங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படலாம் என அறிய வருகிறது.

தமிழ் ஆரம்ப ஆசிரியர்களின் நியமனங்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திற்கென கோட்டா முறையில் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து, குறிப்பிட்டளவு பணம் தென் பகுதிக்கு செலவிடப்பட்டுவிட்டதாம். இதனால் தொடர்ந்து வழங்கப்படும் நியமனங்களுக்கு சம்பளம் வழங்க வசதி இன்மையால் இந்த நியமனங்களை வழங்க முடியாதுள்ளதாம். (ஓ-9)

### வலந்தலையில் கிரனேட் வீச்சு!

காரைநகர், ஜூன் 6

கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர், வலந்தலையில் படைமுகாமுக்கு அருகில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதை அடுத்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

நேற்றுக்காலை தீவிர தேடுதல் இடம்பெற்றது; வலந்தலையூடாகச் செல்லும் வாகனங்கள் தீவிர சோதனைக்குள்ளாகின. (ஓ-73)

### முச்சந்தி முரளி



தமிழர் நியமனம் என்டால் இடைநிறுத்தம் என்ன எதுவும் செய்யலாம் எண்டதை அதிகாரியள் நல்லாத் தெரிஞ்சு வைச்சிருக்கினம் போலை......!

### மிதி வெடியில் ஜவான் காயம்

பருத்தித்துறை, தெணிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக நேற்று மிதிவெடியில் அகப்பட்ட ஜவான் ஒருவர் காயமடைந்தார்.

காணி ஒன்றின் ஊடாகச் சென்ற போதே ஜவான் மிதிவெடியில் சிக்கியதாகத் தெரிய வருகிறது.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்காப் படையினரால் வைக்கப்பட்ட கண்ணிகளில் ஒன்றே இது என ஊகம் தெரிவிக்கப்பட்டது. (ஓ-160)

# மண் சரிவால் இறந்தோர் எண்ணிக்கை மேலும் உயர்வு

## நிவாரணப்பணிகளை ஜனாதிபதி நேரில் கண்காணிப்பார்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவுகளினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது:

இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

களுகங்கை பெருக்கெடுத்ததால் ஒரு சிறுபிள்ளை இறந்தது. கொழும்பிற்கு அருகே களனிப்பாலத்திற்கு அண்மையிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை அடுத்து பலர் குடிபெயர்ந்தனர்.

வெள்ளம், மண் சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிப்பது சம்பந்தமான அலுவல்களை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவே நேரில் கண்காணிக்க உள்ளார்.

நிவாரணத் திட்டங்களின் இணைப்பாளராகப் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா பணிபுரிவார்.

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் பலர் நேற்றும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்றனர்.

நிவாரண, மீட்பு வேலைகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (அ-9)

### கொமேனிக்கு மக்கள் அஞ்சலி

தெஹ்ரான், ஜூன் 6

ஈரான் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியின் ஜனஸ வுக்கு நேற்று பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி செய்ய வந்த மக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் வீடுகள் எரிப்பு கருகிய சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

புத்தூர், தகரப் பிள்ளையார் கோவிலடி கண்டிக்காடு என்னுமிடத்தில் தீவைப்புச் சம்பவம் ஒன்று நடந்தது.

திங்கட்கிழமை (5-6-89) அதிகாலை நடந்ததாகச் சொல்லப்படும் இச்சம்பவத்தில் 10 வீடுகள் எரிந்து சாம்பராகின. எட்டுப் பேர் தீயில் வெந்து இறந்து கிடக்கவும் காணப்பட்டனர்.

தீ வைப்புச்சம்பவம் நடந்த இடத்தில், துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் சொல்லப்பட்டது.

திங்கட்கிழமைச் சம்பவத்தில் பின்வருவோர் அடையாளம் காணப்பட்டு, கருகிய சடலங்களாக மீட்கப்பட்டனர்:

வல்லிபுரம் துரைசிங்கம் (வயது 37), வல்லிபுரம் பாலசிங்கம் (வயது 33) (சகோதரர்கள்-வாதரவத்தை)

தம்பிமுத்து யோகேந்திரம் (வயது 37) வாதரவத்தை. தனையசிங்கம் ஜெயேந்திரம் (வயது 22] வாதரவத்தை. சுந்தரராசா வைகுந்தராசா (வயது 25) வாதரவத்தை.

சடையன் சுந்தையா (வயது 40) கண்டிக்காடு, சின்னவன் சிவபாதம் (வயது 25) கண்டிக்காடு, தவசி நல்லதம்பி வயது 38) கண்டிக்காடு.

பின்வருவோரின் வீடுகள் எரிந்து நாசமாகின:-

வேலன் சின்னவனின் வள

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றுக் காலை கட்டுடையில்

## கல்லூரி மாணவன் சூட்டுக்குப் பலியானார்

மானிப்பாய்-காரைநகர்வீதியில் கட்டுடைப் பகுதியில், நேற்றுக் காலை 6.30 மணியளவில் மாணவன் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கொலையுண்ட மாணவன் பரமேஸ்வரன் முரளீதரன் (வயது 18) என்பவராவர். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் என்று அறிய வந்தது.

பிரஸ்காப மாணவன் 'டியூட்டறிக்குச்' சென்ற சமயம் இவர்மீது அடுத்தடுத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் அவர் மரணமானர் என்று அறியவந்தது.

மாணவனது மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. மாணவனின் தந்தை சாட்சியமளித்து, சடலத்தை அடையாளம் காட்டினர்.

### தெற்கில் மாணவர் போராட்டம்?

தென் இலங்கையில் மாணவர் போராட்டம் ஒன்று வெடிக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரிய வருகிறது.

பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்குகொள்வர் என்றும் அறியவருகிறது.

இந்திய அரசுக்கு எதிரான ஒரு போராட்டமாக இது இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை இந்தியத் தலைமைப்பீடத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்போவதாகவும், மற்றும் இலங்கையில் உள்ள இந்தியப்படையை திருப்பிதாயகம் அனுப்ப ஆதரவு திரட்டிஇலங்கை அரசை தூண்டப்போவதாகவும் இலங்கையில் உள்ள மாணவர் இயக்கம் [I. U. S. F] அறிவித்துள்ளதாக நேற்று ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஓ-எ)

# அண்மைக் கால நிகழ்வுகள் இரு நாடுகளையும் பாதிக்கின்றன

## வெங்கட்ராமன் புதிய தூதுவர் கல்பகேயிடம் கவலை

புதுடில்லி, ஜூன் 6

நாம் அண்டை நாட்டவர்கள் ஆனால் இந்த நாடுகளின் அண்மைக்கால நிகழ்ச்சிகள் இரு நாடுகளையும் பரஸ்பரம் பாதிக்கின்றன என்பதே உண்மையாகும்.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதரான டாக்டர் ஸ்டான்லி கல்பகேயிடம் கவலை தெரிவித்தார்.

இலங்கையின் புதிய தூதரான டாக்டர் ஸ்டான்லிகல்பகே நேற்று புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி இரா. வெங்கட்ராமனிடம் தனது நியமனப்பத்திரத்திரங்களைச் சமர்ப்பித்தார்.

அப்போது பேசுகையில் ஜனாதிபதி வெங்கட்ராமன் சொன்னதாவது:

இந்திய - இலங்கை உடன்படிக்கை பரஸ்பர நம்பிக்கையின் தெளிந்த வெளிப்பாடு இதைச் செயற்படுத்தும் கடமை இரு நாடுகளுக்கும் உண்டு.

நாம் அண்டைநாட்டவர்கள். ஆனால் இந்த நாடுகளின் அண்மைக்கால நிகழ்ச்சிகள்இருநாடுகளையும் பரஸ்பரம் பாதிக்கின்றன என்பதே உண்மையாகும்.

இலங்கை நன்ருக இருக்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

# எல்லாத் தரப்பினரும் ஏற்கும் நியாயமான உடன்பாடு தேவை

## இந்திய ஜனாதிபதியிடம் புதிய தூதுவர்

புதுடில்லி, ஜூன் 6

சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான உடன்பாடு காணவேண்டும்- என்று இந்திய ஜனாதிபதியிடம் இலங்கையின் புதிய தூதுவர் தெரிவித்தார்.

நியமனப் பத்திரங்களை இந்திய ஜனாதிபதியிடம் கையளித்து தூதுவர் டாக்டர் கல்பகே சொன்னதாவது:-

இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் மூலம் கருத்தொற்றுமை காண எனது நாட்டு மக்கள் விரும்புகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான உடன்பாடு காணவேண்டும்.

இப்படி டாக்டர் ஸ்டான்லி கல்பகே கூறினர். (அ-எ)

### மட்டுநகரில் சுவரொட்டிகள்

மட்டக்களப்பு, ஜூன் 6

இந்தியப்படை திரும்பி அனுப்பப்படுவதை ஆட்சேபித்து மட்டக்களப்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்

[6ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

06 — 06 — 1989
வைகாசி — 24
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10 22 முதல் 11 52 வரை
ராகுகாலம்:
02 52 முதல் 04 22 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மரம் அரியும் பாட்டுவாள் ரூதைவாள், மேசைவாள் சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- துரை அரிவு மில், மாதா கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (732)

நல்லநிலையிலுள்ள ஐஸ்கிறீம் கம்பனி அதனுடன் கூடிய பொருள்களும் D பிறி சர்களும் 1 ஸ்ரீ மொடல் A 55 காரும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 33, ஆடிய பாத ரோட், கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு. (11166)

மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 50 யார் தூரம் இணுவில் வீதியில் வருமானமுள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ப. கனகசபை, இணுவில் ரோட், மானிப்பாய். (11148)

### தவறிவிட்டது

சோமசுந்தரம் பேரின்பநாயகம் என்பவரின் சாரதி அனுமதிபத்திரம் இல. D-L 197299 - 28-05-1989 இல் யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுப்போர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11163)

A. C. மொகமட் லா பீர் ஆகிய எனது அடையாள அட்டை (693362741 V) தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11167)

### SAAI RAAM

பாவித்த அலுமாரி, சோகேஸ், சாப்பாட்டுமேசை, செற்றி, T. V, 17'' Rice Cookers, Fridge, Cycle, National Two in one 5030 SaaiRaam, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (11164)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் (COB'B) புறயிலர் குஞ்சுகள் (06-06-89) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல:09, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (590)

### புரொயிலர் குஞ்சு விநியோகம்

Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் 08 - 06 - 89 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & Bro பிரம்படி லேன், கொக்குவில். [731]

## ஆங்கில சேவைக்கால பயிற்சி

பருத்தித்துறை, ஜூன் 6

வடமராட்சிகோட்டக்கல்வி பிரிவினுள் அடங்கும் உடுப்பிட்டி, பருத்தித்துறைக்கல்வி வட்டாரப் பாடசாலைகளில் ஆண்டு 4, 5, 6 ,இல் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

உடுப்பிட்டிக்கல்வி வட்டாரத்துக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு 7 ஆம் திகதியும் பருத்தித்துறை கல்வி வட்டாரத்துக்கானசேவைக்காலப் பயிற்சி வகுப்பு 12 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதெனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ச-118)

## சிரமதானம்

பருத்தித்துறை, ஜூன் 6

கரவெட்டி கிழக்கு காளி கோயிலுக்கு அருகாமையில் பாழடைந்த நிலையில் இருந்த கிணறு சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இச் சிரமதான வேலையில் நாமகள் சனசமூக நிலையமும் கிராம மக்களும் பெரும் அளவில் பங்குபற்றினர்கள். (ச-118

---

## விண்ணக வாழ்வின் முதலாவது ஆண்டு நினைவு



### பி. மரியடொறிஸ்

அன்னையின் மடியில்: 1968 - 11 - 12    ஆண்டவன் அடியில்: 1988 - 06 - 06

அன்புத் திருவுருவே! நீர் அழியாத கோலங்கள் காட்டி எம்மை அழவைத்து ஆண்டு ஒன்று பறந்தாலும் உமது நினைவை ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றோம் தரணியிலே.

ஆண்டு பல ஆனாலும் அழுது நெஞ்சம்
ஓயாதம்மா! அன்னையுள்ளம் தவிக்குதம்மா!
ஆறுதல் நீர் இல்லாமல் தந்தை நெஞ்சம்
வெடிக்குதம்மா! உம் நினைவலைகள் மாறாமல்
சோதரரும் சோர்ந்துவிட்டார் உம் சொந்தம்
விட்டுப் போனதென்று! உறவினரின்
ஒப்பாரி ஓயவில்லை உம் நினைவால்!

அனைவரும் சேர்ந்து உமக்குச் சாத்துகின்றோம் கண்ணீர்ப்பூக்கள்! உமது ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம் இறைவனிடம்.

உமது பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, அண்ணாமார், தம்பிமார், அண்ணி மற்றும் உறவினர்கள்.**

துறைமுக வீதி,
மாதகல். (859)

---

பிரயாணம்.... பிரயாணம்... பிரயாணம்....

# "M" THREE TRAVEL

வழங்கும்

● சவூதி அரேபியா ● குவைத் ● மாலைதீவு

பிரயாணம்

### (1) சவூதி அரேபியா (SAUDI ARABIA) உடனடிப் பிரயாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | Electrical Engineers | 3 | வெற்றிடங்கள் | 1700 SR |
| (ii) | Mechanical Engineers | 2 | '' | 1700 SR |
| (iii) | Street Light Electricians | 3 | '' | 800 SR |
| (iv) | Traffic Light Technicians | 2 | '' | 1000 SR |
| (v) | Royal Commission Drivers | 7 | '' | 750 SR |
| (vi) | '' '' Labourers | 25 | '' | 325 SR + Over Time |
| (vii) | Gardeners | 4 | '' | 425 SR |
| (viii) | Gardener (Plumber) | 1 | '' | 500 SR |
| (ix) | Supervisers | 5 | '' | 400 SR |
| (x) | Diesel Petrol Mechanics | 4 | '' | 900 SR |
| (xi) | Cleaners | | | 400 SR |

### (2) குவைத் (KUWAIT)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | Crane Operators | 30 | வெற்றிடங்கள் | 60 Dinnal | (KDS) |
| (ii) | Heavy Equipment Operators | 35 | '' | 60 '' | (KDS) |
| (iii) | Dump Truck Drivers | 35 | '' | 60 '' | (KDS) |
| (iv) | Helpers | 15 | '' | 30 '' | (KDS) |
| (v) | Labourers | 120 | '' | 24 '' | (KDS) |

### (3) மாலைதீவு:

பெண்களுக்கு மட்டும் உடனடிப் பிரயாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | Lady Doctor | 1 | வெற்றிடம் | |
| (ii) | Tailors | 15 | '' | 85 USD |
| (iii) | Helpers | 25 | '' | 70 USD |

✶ PassPort, Bond என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

✶ நம்பிக்கை! ✶ நாணயம்!!

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திர பவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2800)

---

வடக்கு - கிழக்கு இணைப்பு:

# வாக்கெடுப்பை ஒத்திவைப்பதை ஜனாதிபதி பிரேமா எதிர்க்கவில்லை

## இந்து இணை. ஆசிரியர் ராம் தகவல்

கொழும்பு, ஜூன் 6

இந்த ஆண்டு இறுதிவரை அல்லது அதற்குப் பின்னரும் கிழக்கில் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படலாம் என்ற எண்ணத்தை ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்க்கவில்லை.

இந்து இணையாசிரியர் என். ராம், ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்தபின்னர் 'இந்து' 3-6-89 இதழில் முன்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

ஐ. தே. க. இணைப்பைஎதிர்க்கிறது.

ஆனால் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு முன்னர் தரை நிலைமையைப் பார்க்கவேண்டும். சர்வசன வாக்கெடுப்பை நடத்த இது அல்ல தருணம். கால அவகாசம் கொடுக்கவேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர்.

'இப்பிரச்சினையை வேறுவழிகள்மூலம் தீர்க்கப் பார்க்க வேண்டும,

'ஒருவரின் உரிமையையும் பறிக்கக்கூடாது என்பதில் நான் தெளிவாக உள்ளேன். எல்லாம் ஆலோசனை நடத்துவதில்தான் தங்கியிருக்கிறது. கட்டாயப்படுத்திச்செய்யமுடியாது''—

தஇப்படி ஜனாதிபதி பிரேமதாஸ சொன்னார் என்று திரு. ராம் 'இந்துவில் எழுதியிருக்கிறார். (இ-எ)

# அமைதிப்படை வெளியேறுமானால் தமிழீழமே மக்களுக்கு பாதுகாப்பு

## ஈ. என். டி எல். எப். அறிக்கை

ஜூலை 29 ஆம் திகதிக்குள் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்திருப்பது அவரது தன்னிச்சையான போக்கை வெளிப்படுத்துவதுடன் தமிழ் சிங்கள மக்களிடையே மீண்டும் பகைமையை உண்டுபண்ணி யுத்தத்துக்குத் தயார் ஆகிறார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. தமிழ் மக்களது பாதுகாப்பை நிராகரித்துவிட்டு அமைதிப்படை உடனடியாக வெளியேற ஜனாதிபதி பிரேமதாஸ நிர்ப்பந்தித்தால் தமிழ் ஈழத்தை பிரகடனப்படுத்தி தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதைத் தவிர வேறு வழியேயில்லை.

ஈ. என். டி. எல். எப். பொதுச் செயலாளர் ஜி. ராஜன் சென்னையிலிருந்து விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போது தமிழ் மக்களுக்கானபாதுகாப்பு அமைப்பு உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் இந்திய இராணுவம் வெளியேறும் என்று இந்திய அரசு எமக்கு உறுதி அளித்தது.

ஸ்ரீலங்கா அரசின் தேவை முடிந்ததும், இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமானால் தமிழ் மக்களினது பாதுகாப்பை உறுதி செய்து தமிழ் ஈழத்தைப் பிரித்துத் தந்து விட்டுச் செல்வதே இந்தியாவின் கடமையாக அமைய வேண்டும்.

அமைதிப்படை வெளியேற வேண்டும் என்பதற்கு நாம் முரணானவர்கள் அல்லர். ஆனால் தமிழ் மக்களது பாதுகாப்பு இலங்கை இராணுவத்திடம் போய்ச் சேர்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களைக் கொடுக்க ஜனாதிபதி பிரேமதாஸ பின் வாங்குகின்றார். எனவே இலங்கை அரசிடம் இருந்து தமிழ் மக்கள் பாதுகாப்பை எதிர் பார்க்க முடியாது.

எனவே நிரந்தர பாதுகாப்பும் அமைதியும், தமிழ் மக்களுக்கான உரிமைகளும் கிடைக்கும் வரை இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது. அப்படி வெளியேற இலங்கை அரசு நிர்ப்பந்தித்தால் தமிழ் ஈழக் கோரிக்கையை இந்திய அரசு ஏற்று அதற்கு ஆதரவளிக்க வேண்டும். இதுதான் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பானது, மாறாக வேறு எந்தச் சமாதானமும் தமிழ் மக்களை திருப்திப்படுத்தாது.

எனவே அமைதிப்படை வெளியேறுவதற்கு முன்னர் இந்திய அரசு அனைத்து தமிழ் இயக்கங்களையும் அழைத்துப் பேசவேண்டும் என்று ஈ.என். டி. எல். எப். கோருகின்றது.

அமைதிப்படை உடனடியாக வெளியேற வேண்டுமானால் தமிழீழமே தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பானது.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மாகாண மட்டத்தில் சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 6

சட்டமா அதிபர் திணைக்களம் மாகாண மட்டத்திற்கு பரவலாக்கப்படவிருக்கிறது.

மாகாண சபைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்காக அரச சட்டத்தரணிகள் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

மாகாண சபைச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு குறித்து மாகாண சபைகளுக்கு இவர்கள் சட்ட ஆலோசனை வழங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

## கோப்பாயில் சேவைகாலப் பயிற்சி


கொழும்பு, ஜூன் 6

கோப்பாய் வட்டார மனைப் பொருளியல் ஆசிரியர்களுக்கான சேவைகாலப் பயிற்சி வகுப்பு 9-ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறும்.

வகுப்பை ஆசிரிய ஆலோசகர் திருமதி த. யேசுதாசன் நடத்துவார். (இ)

---

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு. த. கதிரவேலு

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 12. 02. 1925    மறைவு: 10. 06. 1986

நீங்கள் அமரராகி மூன்று வருடம் கடந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் எமது நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**மனைவி, மக்கள், மருமகள்.**

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (11165)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### சிவக்கொழுந்து அமிர்தலிங்கம்

(Rtd Teacher Adampan)

மண்ணுலகில் 26- 08- 1920    விண்ணுலகில்: 30- 05- 1987

திதி: 06- 06- 1989

உன்பதியை நீர் நாடி ஈராண்டு பறந்ததம்மா
எம் இதயம் துடிப்பது ஏன் உங்களுக்குக் கேட்கவில்லை?
அம்மா ! என்றழைத்தால் அன்புடனே அணைத்திடுவாய்!
அம்மா, அம்மா என்றெவ்வோர் கணமும் ஏங்குவது
உள்ளம் மட்டுமல்ல எம் உதிரத்து அணுக்களுந்தான்
ஏன் அம்மா வரவில்லை? ஏன் அம்மா வரவில்லை?
எங்கிருந்தோ பார்க்கின்றாய்,
எமை என்றும் காக்கின்றாய்
எம் அன்புத் தெய்வம் - அம்மா,
உனை எப்போ நாம் காண்போம்?

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

**சகோதரர்கள், மைத்துனர்கள், மக்கள் மருமக்கள், பேரன்மார், பேத்திமார்.**

அடம்பன். (861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி பெற்றவர்களும் துப்பாக்கி வைத்திருக்க முடியாது

கொழும்பு, ஜூன் 6

அனுமதி பெற்று துப்பாக்கி வைத்திருப்பவர்களும். அவற்றைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

அனுமதி பெற்றுள்ளவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் அனைத்தையும் திரும்பப் பெறும்படி பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா உத்தரவிட்டிருக்கிறார்.

தீவிரவாத சந்தேக நபர்களால் துப்பாக்கிகள் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைக்கும் உரிமையாளருக்கு அதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தோல்வி அடைந்த நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளையும் திரும்பப் பெறும்படியும் பொலீஸ் மா அதிபர் உத்தரவிட்டார்.

திரும்பப் பெறும் துப்பாக்கிகள் தீவிரவாதிகளின் பயமுறுத்தலுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கு வழங்கப்படும். (ஓ-எ)

## கரவெட்டியில் கோமாரி தடுப்பூசி

கரவெட்டி, ஜூன் 6

கரவெட்டி தச்சன் தோப்புப் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை கோமாரி தடுப்பூசி ஏற்றப்படும்.

கோமாரி நோயினால் பாதிக்காத மாடுகளை மட்டும் கொண்டு வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-70)

## கல்முனைப் பகுதியில் இடையிடையே பதற்றம்

மட்டக்களப்பு, ஜூன் 6

கல்முனைப் பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்பிக்கொண்டிருந்தாலும் இடையிடையே ஏற்படும் அசம்பாவிதங்களினால் பதற்றம் உண்டாகிறது.

கல்முனையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஆழ் கடலில் மீன்பிடிக்கசென்ற இரு வள்ளங்கள் மீது, ஆயுதபாணிகள் மேற்கொண்ட தாக்குதல் களினால் வள்ளமும், மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டு நீரில் மூழ்கடிக்கப்பட்டன.

வள்ளங்களில் பயணம் செய்த இரு மீனவர்கள் பற்றித் தகவல் இல்லை. இருவர் காயமுற்றனர். மேலும் இருவர் பாதுகாப்பாகத் திரும்பியுள்ளனர்.

அன்றிரவு அரிசி ஆலை, ஒரு சாப்பாட்டுக்கடை ஆகியன கொள்ளையடிக்கப்பட்டன.

மக்களிடையே பயம், பீதி நிலவுகிறது. அரச அலுவல்கள், வங்கிகள், பாடசாலைகள், போக்குவரத்து, கடைத் தெரு அலுவல்கள் இயங்கினாலும் ஸ்தம்பித நிலை காணப்படுகின்றது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. (ஓ-21)

## கூட்டுறவு தினவிழா

நெடுந்தீவு, ஜூன் 6

நெடுந்தீவில் உள்ள பதின்மூன்று சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத்தின் அனுசரணையுடன் ஒருங்கிணைந்து கூட்டுறவு தினவிழாவைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளன.

கூட்டுறவுதினவிழாவை யொட்டி மாணவர்களிடையே கூட்டுறவுதொடர்பான பேச்சு கட்டுரைப் போட்டிகளும் நடைபெறும் அடுத்த மாதம் நடுப்பகுதியில் விழா நடைபெறும்.

கூட்டுறவுதின விழாவை யொட்டி நெடுந்தீவில் உள்ள கூட்டுறவாளர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.

விசேஷ மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (க-111)

## சிறந்த முறையில் மதிய உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 6

பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவை மேற்பார்வை செய்வதற்காக கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலைக்கு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி திடீர் விஜயம் செய்தார்.

நன்கு திட்டமிடப்பட்ட முறையில் மதிய உணவு அங்கு வழங்கப்படுவதாக அவர் தமது குறிப்பில் தெரிவித்துள்ளார். (ச)

## தற்காலிக எழுதுவினைஞர் பதவிகள்

யாழ்ப்பாணம். ஜூன் 6

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவு அலுவலகங்களுக்கு அமைய (தற்காலிக) எழுதுவினைஞர்கள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-3)

## பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார்

வெள்ளவாய பொலீஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி சுனில் டி சேரம் என்பவரும் கான்ஸ்டபிள் கருணாரத்ன என்பவரும் கடந்த வியாழக்கிழமை காலை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டனர்

ரோந்து வந்து கொண்டிருந்த போது இப்பொலீஸ் கோஷ்டி மீது ரன்தெனியா என்ற இடத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

## கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 6

கடந்த 30 ஆம் திகதி கோப்பாய் தெற்கு நாவலர் பாடசாலைக்கு அண்மையில் தனித்து ஒருவர் நடத்திய கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கிறீஸ் கத்தி, துப்பாக்கி சகிதம் இரவு 12 மணியளவில் வீடொன்றினுள் புகுந்த இளைஞர் ஒருவர் சுமார் 77 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளை அபகரித்துச் சென்றாராம். (ஓ-9)


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் – பின் -



சேவை ஒழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின் தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிர மாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.

கிடைக்கும் ரகங்கள் -
12" மற்றும் 14" கறுப்பு/வெள்ளை; 14" வர்ணம்
(ஸ்டீரியோ) மற்றும் (மொனிட்டர்); 16" வர்ணம்; 20" வர்ணம்,
விலை, குறைந்தது ரூ. 4,390/- முதல்.

# சிங்கர் தொலைக்காட்சி


உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராண்டு நினைவு அஞ்சலி



திருநாவுக்கரசு ஜெயாதரன்
(தரன்)

தாயின் மடியில்: 01 - 02 - 1971
மண்ணில்: 30 - 05 - 1987
திதி: 06 - 06 - 1989

எங்கள் அன்புச் செல்வமே!
நீ பிரிந்து ஆண்டு இரண்டு சென்ருலும்
உன் நினைவு என்றும் எங்களுடன் நிழலாடுகிறது
உனது கொள்கைகள் நிலைக்கவேண்டும்
அந்த நாள் உன் ஆத்மா சாந்தியடையும்!

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணு, தம்பி.

நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (11161)



உ
ஓம் முருகா
ஓராண்டு நினைவஞ்சலி



மு. சி. சிற்றம்பலம் அவர்களின்
[பிரபல வர்த்தகர்]
நீங்காத நினைவுகள்

தோற்றம்: 02 — 04 — 1908
மறைவு: 18 — 05 — 1988
திதி: 06 — 06 — 1989

எம் குல விளக்காய் விளங்கி
உள்ளத்துள் ஒளி விளக்காய் ஒளிவிட்டு
ஓராண்டு நிறைவுற்றது.
காலங்கள் கழியலாம்
கவலைகள் கரையவில்லை
ஆண்டுகள் பல கழிந்தாலும் உங்கள்
அன்பான நினைவுகள் கலையாது
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்ருர், உறவினர்கள்.

வங்களாவடி,
வேலணை. [11129]


# பாடகருடன் ரசிகர்களை

# இணைக்கும் இசைப்பண்பாடு தேவை

## பேராசிரியர் சிவத்தம்பி சொல்கிருர்

யாழ்ப்பாணம், ஜூன் 06

''மற்றைய துறைகள் வளர்ந்த அளவுக்கு இசைக் கலை இங்கு வளரவில்லை. அதற்குக் காரணம் எமக்கென்று இசைப்பண்பாடு இல்லாமைதான். ஒரு கலைஞன் வாசிக்கும்போது அவர் என்ன ராகத்தில் வாசிக்கிருர் என்பது எமக்குத் தெரியாது. அவர்களின் நாதத்தையும் இனிமையையும் தான் நாம் எடுத்துச் சொல்கின்ருேம். ஆகவே அவர்கள் வாசிக்கும் விடயங்களை நாம் உணரக்கூடிய வகையில் அவர்களுடன் நாமும் ஒன்றிணையக் கூடியதாக எமக்கென்று இசையை ரசிக்கவல்ல, இசைப்பண்பாடு உருவாக்கப்பட வேண்டும்'';

யாழ்- பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ்- நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற சங்கீத வித்வான் செல்வி கனகாம்பரி பத்மநாதனின் இசை அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்ற இந்த அரங்கேற்ற விழாவின் ஆரம்பத்தில் சைவக்குருமார் மங்கள விளக்கேற்றினர்.

கவிஞர் சோ. பத்மநாதன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

பேராசிரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

இன்று இந்த அரங்கேற்றத்தைப் பார்க்கும்போது இன்றைய பண்பாட்டில் அசாதாரணமான நிகழ்வு. கலைஞர், ரசிகர்கள் உட்பட பல தரப்பட்டவர்கள் கூடியுள்ள நிகழ்வு.

நாதஸ்வர கலாநிதிஎன்.கே. பத்மநாதனின் பாரம்பரிய கலை வளர்ச்சியில் புதிய பரிணமம் அவர்மகள் கனகாம்பரி.

சிலப்பதிகார வரலாறு முதல் அரங்கேற்றம் எம்பண்பாட்டில் தொடர்ந்து வருகிறது. நாடக, கலை, இலக்கிய அரங்கேற்றங்கள் எம் பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றபோதும் இசை அரங்கேற்றங்கள் குறைவாகவே இருந்து வருகின்றன.

ஒருவர் பெற்ற கல்வியின் பயிற்சியின் திறன், வளர்ச்சி, திறமை ஆகியவற்றின் உரைகல்தான் இந்த அரங்கேற்றம்.

சாஸ்திரீக கர்நாடக கலைதான் தூயகலை. கலைஞர்கள் கர்நாடகக் கலையில் ஊறித் திளைத்து, அதில் ஆழம்போய் அளிக்கும் கலைதான் உண்மைக் கலையாகும்.

என். கே. பத்மநாதன் நாதஸ்வரம் வாசிக்கிருர் என்ருல் அவர்தான் அவரின் ரசிகன். அப்படி வழங்கும் கலைதான் எம்மையும் கலையின் ஆழத்துக்கு இழுத்துச்செல்லும். அத்தகைய கலையே எமக்குத் தேவை.

இன்று நடக்கும் விழா சிறப்புற, தொடர்ந்து கலை வளர கால்கோளாக அமைய வேண்டும்.

இப்படி அவர் கூறிஞர்,

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய ஸ்வாமிகள் ஆசியுரையில் கூறியதாவது:-

நீண்டகாலமாக வெடிச் சத்தங்களையும், குண்டுச்சத்தங்களையும் கேட்டுக்கொண்டிருந்த எம் செவிகள் இன்று இனிய நாதத்தைக் கேட்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

சங்கீத உலகில் தனக்கென இடம் பிடித்து மக்களின் அழியாத சொத்தாக வளர்ந்து வரும் என். கே. பத்மநாதனின் மகளும் வளர்ந்து அவரது வாரிசாக வரவேண்டும்.

இப்படி அவர் கூறிஞர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது:

இசை மரபை கட்டிக்காத்து அதன் வழியில் சென்று சேவையாற்றி வரும் என். கே. பத்மநாதனின் வழியில் வந்துள்ள கனகாம்பரியின் இசைப்பணியின் ஆரம்பவிழா இன்று நடக்கின்றது.

இவரின் பணி வளர்ந்து பெரும் இசைமேதையாக வர வேண்டும் என்று ஆசிர்வதிக்கின்றேன்.

இப்படி அவர் கூறிஞர்.

கந்தவனக்கடவை மக்கள் சார்பாகவும், கம்பன் கழகத்தின் சார்பாகவும் சிவத்தமிழ்ச் செல்வி, செல்வி கனகாம்பரிக்குப் பொன்னுடை போர்த்திஞர்.

சங்கீத வித்வான் ராம் குமாரசாமி, விரிவுரையாளர் வசந்தா வைத்தியநாதன், திலகநாயகம்போல், கம்பன் கழகசெயலாளர் இ.ஜெயராஜ் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கிஞர்கள்.

இசை அரங்கேற்றத்தைக் காண ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தனர்.

(இ-3)

# ஷப்ரு - சென்றலெட் அணிகளின் இறுதி ஆட்ட விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஷப்ரு நிதி நிறுவனத்தின் ஆதரவில் ஷப்ரு சுற்றுக் கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஷப்ரு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய சென்றலெட் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகம் ஷப்ரு கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

40 ஓவர்களைக் கொண்டதாக அமைந்த இந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலெட் அணி குறிப்பிட்ட ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

பி. றஜீவன் 43, ஏ. சிவச்சந்திரன் 42, எஸ். விஜயநாதன் 39, டீ. புரட்சிதாசன் 35, எஸ். சாந்திஹரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் வை. ஜெயந்தன், எஸ். தயாளன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், எஸ். சுரேஸ், எஸ். பி. எஸ். இளங்கோ, பி. பிரபாநந்தன். ஏ அன்ரூ கிறேஷியன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய ஷப்ரு அணி 162 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் மைதானத்திலுள் பிரவேசித்த ஷப்ரு அணியின் விக்கெட் காப்பாளர் சி. என். வித்தியாதரன் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் அன்ரூ கிறேஷியனுடன் இணைந்து ஆடி ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களை பெற்ருரெனினும் அன்ரூ கிறேஷியன் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததை அடுத்து ஷப்ரு அணி 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஏ. அன்ரூ கிறேஷியன் 55, ஆர். விஜயகுமார் 27, பி. முருகவேள் 24, எஸ். தயாளன் 18, சி. என். வித்தியாதரன் ஆட்டமிழக்[illegible] 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் [illegible] நாதன், கே. சண்முகலிங்கம், எம். முகுந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் எஸ். பாலகுமார் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டிக்கு டீ. எம். வேதாபரணம், சி. நந்தகுமார் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

அண்மையில் காலமான சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் ஜொலியன்ஸ் விளையாட்டுக் கழக வீரனுமாகிய எஸ் ரி. அகிலனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி அனுட்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப் போட்டிக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்: ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை பரிசில்களை வழங்கிஞர்.

### விசேட பரிசுகள்

அபாரமான 'கட்ச்' ஒன்றைப் பிடித்ததுக்காக நொதேர்ண் விளையாட்டு வீரர் எஸ். உமாகாந்தனுக்கும் இப்போட்டித் தொடரின் ஒரே ஒரு சதமாகிய 120 ஓட்டங்களைப் பெற்றமைக்காக ஷப்ரு விளையாட்டுக் கழக வீரர் ஆர். விஜயகுமாருக்கும் விசேஷ பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதிப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளின் சிறந்த பந்து தடுப்பாளராக ஷப்ரு அணியைச் சேர்ந்த பி. பிரதீபனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஷப்ரு அணியைச் சேர்ந்த ஆர் விஜயகுமாரும்; சிறந்தபந்துவீச்சாளராகசென்றலெட் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே. சண்முகலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டியில்சிறந்த பந்து தடுப்பாளராக ஷப்ரு அணியைச் சேர்ந்த வை. ஜெயந்தனும், சிறந்த பந்து வீச்சாளராக சென்றலெட் (சொக்ஸ்) அணியைச் சேர்ந்த கே. சண்முகலிங்கமும் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஷப்ரு அணியைச்சேர்ந்த ஏ. அன்ரூ கிறேஷியனும் இப்போட்டியின் சிறந்த வீரராக சென்றலெட் (சொக்ஸ்) அணியைச் சேர்ந்த [illegible] மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றிய டீ. எம். வேதாபரணம், எஸ். உமாகாந்தன், சி. நந்தகுமார், எம். சிதம்பரப்பிள்ளை, எஸ். விமலதாசன் ஆகியோருக்கும் விஷேட பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதியாக இப்போட்டியின் போது ஷப்ருநிதி நிறுவனம்நடத்திய கிரிக்கெட்புதிர்ப் போட்டியில் வெற்றி பெற்ற வி. விவேகானந்தன், க. அமுதன், எஸ். கிருபாகரன், ந. சஞ்சீவ், க. அருள்மொழி ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

(இ-6)


3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திரு. மா. எட்வின் கந்தசாமி
(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஊழியர்)

மலர்வு: 27 — 04 — 1939
உதிர்வு: 05 — 06 — 1986

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! தங்களை இந்நாளில் அன்புடன் நினைவுகூரும்:

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
உறவினர்கள்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வத்தை,
உடுவில். [845]



5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 - 11 - 1945
உதிர்வு: 02 - 06 - 1984
திதி 06. 06 1989

அமரர் மா, பாலசுந்தரம்
(முன்னுள் சுன்னுகம் பாலன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்.

'பழமுதிர்ச்சோலை'
ஏழாலை மேற்கு,
ஏழாலை. [857]



ஈராண்டு நினைவஞ்சலி



கந்தையா தவநிதி (பவான்)

தாயின் மடியில்: 23- 04- 1966
ஆண்டவன் அடியில்: 06- 06- 1987

அண்ணன் 'அல்பேட்' காட்டிய வழியை
அவனின் பின்னல் நீயும் தொடர்ந்தனை
தன்னிகரின்றி தரணிக் குணர்த்திய
தாரக மந்திரமாக வெங்காதில்
இன்னு மின்னும் ஒலித்துக் கொண்டிருக்கும்
ஏகாந்தக் குரல் 'தியாகம்' என்பதே.

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார், உறவினர்கள்,
நண்பர்கள்.

(850)



ஓராண்டு நினைவஞ்சலி



திரு. க. சங்கரசிவம்
(யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை முன்னுள் ஆசிரியர், மிருதங்க வித்துவான்.)

மலர்வு: 13. 06. 1939
மறைவு: 18. 05. 1988

எங்கள் குடும்பத்தின் திருவிளக்காய், இசையின் இருப்பிடமாய் இருந்த குலக் கொழுந்தே! தாங்கள் சிவத்துடன் விரைந்து சங்கமமாகியது தங்கள் பொன் விழாவைப் புனிதராம் கைலைவாசன் காலடியில், கனிந்த பக்தியுடனிருந்து நந்தியெம் பெருமானுடன் மிருதங்கம் இசைத்துக்கொண்டாடவன்றோ!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மகன், தகப்பன்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறுமக்கள்,
உறவினர்கள்.

கொம்மந்தறை,
உடுப்பிட்டி.

(823)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

**பொருள்:**
மாசற்ற குடிப்பண்புடன் வாழ்வோம் என்று கருதி வாழ்வோர், வஞ்சனை கொண்டு தகுதியில்லாதவற்றைச் செய்யமாட்டார்.

உதயன்
இல: 392/2, நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 23078
06 - 06 - 1989 ... பெ. இல: ..

## தனித்துவத் தலைவர் கொமேனி

ஈரானின் பெருந்தலைவரும், ஆன்மீகத் தலைவருமான ஆயத்துல்லா கொமேனி தமது எண்பத்தெட்டாவது வயதில் கடந்த சனிக்கிழமை காலமானார். கடந்த ஒரு தசாப்தமாக அவர் ஈரானிய மக்களை வழிநடத்தி வந்தவர்.

அவரது பிரிவால் உருவான இடம் பெரும் இடைவெளியாகிவிட்டது என்பது ஈரானிய மக்களின் கருத்து. அவரது மரணச் செய்தி கேட்டு வீதிகளிலும், வீடுகளிலும் தமது தலைகளில் அடித்துக் கதறி அழுத பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தக் கருத்துக்குச் சாட்சி ஆவர்.

ஆயத்துல்லா கொமேனியின் பதவிக்குப் புதியவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு விட்டபோதிலும், அவர் விட்டுச்சென்ற இடைவெளியை நிரப்புவது என்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பது சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்து.

அவரைப் போன்று தனித்துவத்தையும், அதே வேளை அதிகாரத்தையும், செல்வாக்கையும் நிலைநாட்டக் கூடிய திறமையும், ஆளுமையும் இன்னொருவருக்கு வருமா என்ற சந்தேகம் எழுவது இயல்பானதாகும்.

தலைவர் ஆயத்துல்லா கொமேனி, பதவிக்கு வந்த புதிதில் வெளி உலகுக்கு ஒரு சர்ச்சைக்கு உரியவராகவும், பிரச்சினைக்கு உரியவராகவும், முரண்பாடுகள் பொதிந்தவராகவும், கடும் தீவிரப் போக்குடையவராகவும், விசித்திரம் மிக்கவராகவும் தெரிந்தார். முழுக்க முழுக்க மேற்கத்திய பாரம்பரிய மாயையினை நோக்கிச் சென்று கொண்டிருந்த தமது நாட்டில், மறுமலர்ச்சியும் புரட்சியும் காண விழைந்து, அவர் அறிமுகப்படுத்திய நடைமுறைகளே அவரை வெளி உலகுக்கு அவ்வாறு தோற்றமிட்டுக் காட்டின.

ஆனால் ஈரானைப் பொறுத்தமட்டில், அந்த நாட்டு மக்களைப் பொறுத்தவரையில், நாட்டின் முன்னேற்றத்துக்காக, சுபீட்சத்திற்காக, பொருளாதார வளர்ச்சிக்காக இஸ்லாமிய கலாசாரப் பாரம்பரிய வளர்ச்சிக்காக அடிப்படை மதவியலின் ஆக்கபூர்வச் செயற்பாட்டுக்காக, வித்திட்ட பெருந்தலைவராகவே அவர் மிளிர்ந்தார்.

அடிப்படை மதவாதியான அவர் ஈரானை உண்மையான இஸ்லாமியக் குடியரசாக்கினார், ஆட்சி அமைப்பை, அரசியலமைப்பை மத அடிப்படையில் உருவாக்கினார். ஏகாதிபத்திய - தனிநபர் - ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களாட்சி மலரச் செய்தார்,

மேற்கு நாட்டுச் செல்வாக்கை விரட்டி அடித்தார். அந்தச் செல்வாக்கால் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்பினார். எல்லா வகைகளிலுமே தமது நாட்டை ஒரு தனித்துவமுள்ள நாடாக்க விரும்பினார். அதற்காகவே உழைத்தார்.

ஆகையால் அவர் ஈரானிய மக்களின் மனங்களில் இடம்பிடித்த மக்கள் தலைவரானார் — பெருந்தலைவரானார். அவரது எண்ணங்களும், செயற்பாடுகளும் அதீத வைதிகப் போக்குடையவை எனக் குறை கூறப்பட்டது உண்டு. எனினும் அவற்றையும் மக்கள் விரும்பக்கூடிய விதத்தில் வழங்கினார் என்பதே அவரது சிறப்பாக அமைந்தது.

தனக்கு முந்திய ஆட்சியாளர் மன்னர் ஷாவின் செவிலித்தாய் நாடாக விளங்கிய அமெரிக்க வல்லரசுக்குப் பெருந் தலையிடி கொடுத்து வந்தவர் கொமேனி, அடுத்த வல்லரசான ரஷ்யாவின் செல்வாக்குத் தனது நாட்டைப் பிடித்துக் கொள்ளாமலும் தடுத்துக் கொண்டார் அவர்,

மொத்தத்தில் மறைந்த தலைவர் ஆயத்துல்லா கொமேனி ஈரானின் பிரசித்திபெற்ற தலைவராக மட்டுமன்றி, வளைகுடா நாடுகளின் ஒரு வித்தியாசமான தலைவராக மட்டுமன்றி நிகழ்கால உலக சரித்திரத்திலேயே பல தன்மைகளில் தனித்துவமான தலைவராகவும் திகழ்ந்தவர் என்று கூறலாம்.

### உலகிற்குத் தாயான உமையம்மை

எடுப்பு

உலகிற்குத் தாயான உமையம்மை நாகத்தில்
ஒருசின்னப் பெண்ணாக வருவாய் - இவ் (உலகி)

தொடுப்பு

ஒளியுள்ள கடைக்கண்ணின் தெளிவுள்ளே என்னைநீ
ஒருதரம் எண்ணியே பாராய் (உலகி)

முடிப்பு

பொலிவுற்ற பிள்ளையார் சிவவடி வேலவர்
திசைபற்றி இருபுறம் வருவார்
களியுற்ற கணவனோ கயிலையில் லிங்கமாய்
காட்சிக்கு விருந்தாக நிற்பார் (உலகி)

நயினைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை
(இன்று 06-06-1989 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் இரண்டாம் திருவிழா)

● நிலவாயுக்குழாய் வெடித்ததால்

# சைபீரியாவில் 2 ரயில்கள் எரிந்தன; 650 பயணிகள் கருகி மாண்டனர்!

## ஓடும் ரயிலில் இருந்து தெறித்த பொறியின் விளைவு

மாஸ்கோ, ஜூன் 5
சோவியத் யூனியன், சைபீரிய பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை நிலவாயுக் குழாய் வெடித்ததில் ஏற்பட்ட தீவிபத்தில் 650க்கு அதிகமான ரயில் பயணிகள் உயிரிழந்தனர்.

நூற்றுக்கணக்கானோர் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்கள்.

இப்பயங்கரச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:
கருங்கடல் பிரதேசத்தில் உள்ள உல்லாச முகாம்ஒன்றில் விடுமுறையைக் கழித்துவிட்டு மின்சார ரயிலில் சுமார் 1,200 மாணவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

இன்னொரு மின்சார ரயிலும் கருங்கடல் பிரதேசம்நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ரயில்கள் செல்லும் ரயில் பாதை அருகே நிலவாயுக் குழாய் பதிக்கப்பட்டிருந்தது.

சம்பவ தினத்தன்று ட்ரான்ஸ் — சைபீரியப் பகுதியில் ஓர் இடத்தில் இரண்டு ரயில்களும் ஒன்றை ஒன்று கடந்து சென்றுகொண்டிருந்தசமயம் ........

ஒரு ரயிலில் இருந்து பொறி ஒன்று பறந்து நிலவாயுக்குழாயில் இருந்து கசிந்துகொண்டிருந்த வாயுவில் பற்றிக் கொண்டது.

அதைத் தொடர்ந்து நிலவாயுவைக் கொண்டுசெல்லும் குழாய் வெடித்தது.

அது இரண்டு ரயில்களையும் தாக்கியது. அதனால் இரண்டு ரயில்களும் தீப்பிடித்து எரிந்தன!

குழாய்கள் வெடித்துச் சிதறியதால் ஏற்பட்ட தாக்குதலினால் ரயில்களின் கதவுகள் போன்ற பாகங்கள் எட்டு மைல் தூரம்வரை வீசப்பட்டுக் கிடந்தன,

சம்பவம் நடந்தஇடத்திற்கு ஜனாதிபதி கோர்பச்சேவ் விஜயம்செய்து நேரிற் பார்வையிட்டார்.

மாஸ்கோ திரும்பிய திரு. கோர்பச்சேவ்கவனயீனத்தால் ஏற்பட்ட விபத்து இது என்று ஆத்திரத்துடன் கூறினார்.

அழிவுக்குமேல் அழிவுகள் நமது நாட்டில் ஏற்பட்டு வருகின்றன'' என்று கவலைப்பட்ட திரு. கோர்பச்சேவ் கவனயீனம், பொறுப்பற்றதன்மை. நிர்வாக துஷ்பிரயோகம் ஆகியனவே இவ்விபத்துக்குக் காரணம் என்று கண்டித்தார்,(எ)

## தேசிய முன்னணி இன்று கூடி பொதுச்சின்னம்பற்றி முடிவு

ஹைதராபாத், ஜூன் 5
பொதுச்சின்னத்தில் வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு. க. போட்டியிட மறுப்பது பற்றி ஆந்திர மாநில முதல்வரும் தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவருமான திரு. என். ரி. ராமராவ் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

நாளை 6 ஆம் திகதி புதுடில்லியில் தேசிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அப்போது பொதுச்சின்னம்பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்றும் திரு. ராமராவ் சொன்னார்.

தேசிய முன்னணியில் தி.மு.கவும் அங்கம் வகிக்கிறது. (எ)

## போலந்து பொதுத்தேர்தல் 62 சதவீத வாக்களிப்பு

வார்ஸோ, ஜூன் 5
போலந்தில் ஜனநாயக முறையிலான நாற்பதாண்டு கால இடவெளியின் பின்னர் பொதுத்தேர்தல் கடந்த ஞாயிறு நடந்தது.

62 சதவீத வாக்காளர்கள் வாக்களித்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிவுகள் செவ்வாய், புதன்கிழமைகளில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்சங்கத் தலைவர் வால்சே ஆதரவாளர்கள் மேல் சபையில் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்று கூறப்படுகிறது.

எப்படியாயினும் போலந்தில் கம்யூனிஸ்ட்கட்சி ஆட்சி நீடிப்பதற்கு முட்டுக்கட்டை ஏற்படாது என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## செயலிழந்த நிலையில் பீகிங்; தொடரும் இராணுவ நடவடிக்கை

பீகிங், ஜூன் 5
ஆத்திரமுற்ற மக்கள் கூட்டத்தின் மீதுஇன்றும் சீன மக்கள் விடுதலை இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

உயிரிழப்புக்கள் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு நாள் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பத்து லட்சம் மக்கள் வாழும் பீகிங் இன்று செயலிழந்து காணப்பட்டது.

இராணுவ நடவடிக்கை காரணமாக ஆயிரக்கணக்கான குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

தியனன்மன் சதுக்கத்தை 20 கவச வாகனங்களின் உதவியுடன் 2 ஆயிரம் துருப்புக்கள் காவல் புரிகின்றனர்.

இன்று காலை 200க்கு அதிகமான கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் கிழக்குப் பகுதியில் இருந்து தாறுமாறாகச் சுட்டபடி தியனமன் சதுக்கத்துக்கு வந்தனர்.

வீதிகளில் நின்ற மக்கள் சீன அரசின் நடவடிக்கையை ஆத்திரத்துடன் கண்டித்தனர்.

பல்கலைக்கழக மாணவர் மீண்டும் பல்கலைக்கழகம் திரும்பினர். இருந்தும் தொடர்ந்து போராடப் போவதாக அறிவித்தனர்.

பீகிங் நகர மேயர் நேற்று டெலிவிஷனில் பேசினார்.

மாணவரின் கிளர்ச்சி முற்றாக அடக்கப்படவில்லை. நிலைமை பயங்கரமாக இருக்கிறது என்று மேயர் தனது உரையில் தெரிவித்தார்.

இராணுவம், இரக்கம்காட்டாது மாணவரின் கிளர்ச்சியை அடக்கியே தீரும் என்றும் அவர் சொன்னார்.

இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்கவே சீன இராணுவ நடவடிக்கையை எடுத்தது என்று பீகிங் அரசு அறிவித்தது. (எ)

## நேபாள அரசாங்கத்துக்கு இந்தியா மீண்டும்எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 5
இரு நாடுகளுக்கும்இடையேயான தகராறை ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு சென்று சர்வதேசமயப்படுத்த முயற்சிப்பது பலன் தராது என்று இந்தியா நேபாளத்தை எச்சரித்துள்ளது.

ஐக்கியநாடுகள்சபைக் கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் உதவியுடன் பிரச்சினையைக் கிளப்ப நேபாளம் முயற்சித்துவருவது குறித்துக் கவனித்து வருவதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேசமயப் படுத்தும் முயற்சியைக் கைவிட்டுத் தகராறை இருதரப்புப் பேச்சுக்களின்மூலம் தீர்வுகாணநேபாள அரசு வரவேண்டும் என்றும் இந்தியாதெரிவித்துள்ளது.(எ)

### படகு விபத்து

பீகிங், ஜூன் 5
தென் சீனாவின் சால்சாவுக்கு அண்மையில் உள்ள நதி ஒன்றில் படகு கவிழ்ந்தபோது 41 பேர் ஆற்றில் மூழ்கி மரணமானார்கள்.

60 பேரை மட்டும் ஏற்றிச் செல்லக்கூடிய இந்தப்படகில் 90 பேரை ஏற்றியதாலேயே விபத்து ஏற்பட்டது என அறிவிக்கப்படுகிறது. (க)

### ஜெயலலிதாவுக்கு இயற்கை வைத்தியம்

சென்னை, ஜூன் 5
அ. தி. மு. க, பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா பெங்களூரில் மூட்டுவாதத்திற்கு இயற்கை வைத்திய சிகிச்சைபெற்றுவருகின்றார்.

அவர் அங்குள்ள இயற்கை வைத்திய நிலையத்தில் தங்கி சிகிச்சை பெற்றுவருவதாக அ. தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் சொன்னார்.

மூன்றுவாரகாலச் சிகிச்சையின்பின்னரே அவர் சென்னை திரும்புவார்என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

### ஜப்பானின் புதிய பிரதமர்

டோக்கியோ, ஜூன் 5
ஜப்பானின் புதிய பிரதம மந்திரியாக திரு. சொசுக்கோ யூனோ தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னாள் பாதுகாப்பு மந்திரியான சொசுக்கோ யூனோ, ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல்ஜனநாயகக் கட்சிக்குள்ளே நடைபெற்ற போட்டி ஒன்றில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுப் பிரதமரானார். (க)

### இராஜினாமா

புதுடில்லி, ஜூன் 5
இந்திராகாந்தி கொலைச்சம்பவம் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள விசேட புலனாய்வுக்குழுவின் விசேட ஆணையாளர் திரு. அனந்த்ராம் இராஜினாமாச் செய்துவிட்டார். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# அமைதிப்படையை வெளியேறுமாறு கேட்பது ஒப்பந்தத்தை மீறுகின்ற செயல்

## ஈ. பி. ஆர். எல். எப், அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 06
எதிர்வரும் நவம்பர் மாதத்தில் 'சார்க்' நாடுகளின் தலைவர்கள் கூடும் இடமாக கொழும்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளதால் அந்நாட்டுத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் சமயம் இலங்கையில் இந்திய அமைதிப்படை இருப்பது இலங்கையின் சுயகௌரவத்துக்கு நல்லதல்ல எனக் காரணம் கூறி, இந்திய அமைதிப்படையை ஜூலை 29ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறுமாறு ஜனாதிபதி பிரேமதாஸ குரல் கொடுத்திருப்பது தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளது. இது ஒப்பந்தத்தை மீறும் செயல் ஆகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ் பிராந்தியக் கமிட்டி விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இந்திய அமைதிப்படை இருப்பதுதான் இலங்கையின் சுயகௌரவத்துக்கு இழுக்கென்றால், இந்நாட்டின் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை -

அதாவது சர்வதேச நாடுகளால் நாகரிகமாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டுவரும் இனங்களின் அடிப்படை உரிமைகளை-

வழங்க மறுத்து பல ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததையும், தென்கிழக்காசியாவின் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ். பொதுசன நூல் நிலையத்தைத் தீமூட்டி எரித்ததையும் உலகமே பார்த்து எள்ளி நகையாடியது.

இந் நிகழ்வுகளுக்கெல்லாம் ஐ. தே. க அரசுக்குப் பின்னால் பகிரங்கமாகவும் [illegible] வும் இந்நாட்டில் இருந்து செயற்பட்ட சர்வதேச பயங்கரவாதிகளும், கொலைகாரர்களுமான இஸ்ரேலிய ''மொசாட்'' படையும்; பிரிட்டனின் கூலிப்படைகளும் இங்கு நிலைகொண்டிருந்தது, தமிழ்பேசும் மக்களை அழித்தொழிக்க இராணுவ ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கி வருவது இந்நாட்டின் கௌரவத்துக்கு இழுக்கில்லையா? பாதிக்கப்படவில்லையா?

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழ்பேசும் மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்து உண்ண உணவின்றி, செத்து மடிய வேண்டிய நிலையில், இந்திய அரசு விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டசமயம் 'சார்க்' நாடுகள் மட்டுமல்லாமல் உலகமே இலங்கையின் அநாகரிகத் தன்மையைப் பார்த்துக், காறி உமிழ்ந்ததை ஜனாதிபதி பிரேமதாஸா மறந்துவிட்டாரா?

ஐ. தே. க. அரசு வடக்குக் கிழக்கில் முப்படைகள் மூலம் புரிந்த கோரத் தாண்டவத்தால், லட்சக் கணக்கான மக்கள் இந்தியாவின் மாநிலமான தமிழ் நாட்டில், அகதிகளாக தஞ்சம் புகுந்ததையும் அவர்களைப் பராமரிக்க இந்திய அரசு கோடிக்கணக்கான ரூபாக்களை செலவு செய்ததையும், இன்றைய கூட்டாளிகள் மறந்திருக்கலாம். ஆனால் உலக மக்கள் மறக்கமாட்டார்கள்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னரும் எமது பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம்; சிங்கள தமிழ் மக்களை மீண்டும் மோதவிட முயற்சி [illegible] கிழக்கு மாகாண இணைப்பை [illegible] சாரின் உதவியுடன் சம்மாந்துறையில் தமிழ், முஸ்லிம் கலவரத்தை உருவாக்கி, அதனைச் சாட்டாக வைத்து இலங்கை இராணுவத்தை வெளியே கொண்டுவர மேற்கொள்ளப்பட்டு வரும் சதி நடவடிக்கைகள் ''சார்க்'' நாட்டு மக்களுக்கு தெரியாத ஒன்றல்ல.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண அரசுக்கு பூரண அதிகாரங்கள் வழங்க மறுத்து, தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும்; பாதுகாப்பாகவும்; வாழ்வதற்கான சூழ்நிலை உருவாவதைத் தடுத்து, திட்டமிட்ட ரீதியில் தமிழ் முஸ்லிம் கலவரங்களை உருவாக்கிவரும் இவ் வேளையில் இந்திய அமைதிப்படை வடகிழக்கில் இருந்து வெளியேறுவதைத் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

சட்டத்தையும்; ஒழுங்கையும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பையும்; உறுதிப்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும் வரை, இந்திய அமைதிப்படை இங்கிருந்து வெளியேறக்கூடாது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் சகல சரத்துக்களும் பூரணமாக நிறைவேற்றப்பட்டு, உறுதிப்படுத்தப்படும்வரை இந்திய அமைதிப்படையை வெளியேற்றஎடுக்கும்எத்தகைய நடவடிக்கைகளும் ஒப்பந்தத்தை மீறிஒருதலைப்பட்சமாக எடுக்கப்படும் நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### புளியங்கூடல் அம்பாள் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
புளியங்கூடல் செருத்தனைப் பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

சப்பரத்திருவிழா 23 ஆம் திகதியும்தேர்த்திருவிழா 24 ஆம்திகதியும்தீர்த்த திருவிழா 25ஆம்திகதியும்சண்டேஸ்வரர் பூசை 26 ஆம் திகதியும் வைரவர் பொங்கல்ஜூலைமுதலாம் திகதியும்நடைபெறவுள்ளன.

பஞ்சாங்கத்தில் 9ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்த இக்கோயிலின் வருடாந்த உற்சவம் 16 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டதென்பதுகுறிப்பிடத்தக்கது. (ச)

### பொலிகண்டி கந்தவன மகோற்சவம்

வடமராட்சி, ஜூன் 6
பொலிகண்டி கந்தவன ஆலய உற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

17ஆம் திகதி சப்பரமும், 18ஆம் திகதி தேரும், 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஒ-160)

### கர்நாடக இசை விருந்து

யாழ்ப்பாணம் ஜூன் 6
''ஆலாபனா'' சங்கீத சபா, யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறையுடன் இணைந்து வழங்கவிருந்த திருமதி குலபூசணி கல்யாணராமனின் இசைக் கச்சேரி இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிக்கு பக்கவாத்தியங்கள் திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி-வயலின் திரு ஏ. சந்தானகிருஷ்ணன்- மிருதங்கம், திரு எம். சிதம்பரநாதன்-கஞ்சிரா (இ)

### தச்சந்தோப்பு விநாயகர் திருவிழா

கரவெட்டி, ஜூன் 05
கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 10ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

13ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும்14ஆம்திகதி சப்பரத் திருவிழாவும் 16ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-70)

### வணங்கியுன்னை வாழ்த்துகின்றோம்!

கலம்புயலி லலைமோதிக் குமுறி ஒற்போல்
கடுகளவும் அமைதியின்றிக் கலங்கு மெங்கள்
நிலமெங்கும் வஞ்சனையும் நாசத் தீயும்
நினைவதிர அரங்கேறி நெஞ்சைக் குத்த
உலகிலாற நிழல்தேடி ஓடி வந்து
எம்மிதய மல தூவி உன் அருள் கேட்டோம்
விலங்கினமாய் யாம்வாழும் வாழ்க்கை மாற
வணங்கியுனை வாழ்த்துகின்றோம் வழிகாட் டென்றும்.

-பாஷையூர் மு. சிங்கராயர்
(இன்று 6-6-1989 பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் மூன்றாம் நாள் திருவிழா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜோண்சன் Johnson
[10 H.P.]
வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வட்டக்குதியில் கொள்வனவு செய்ய நம்பிக்கையான ஒரே இடம் :
சென் அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்



# உதயன்

06 - 06 - 1989 செவ்வாய்க்கிழமை



கடற்றொழிலாளர்களே!
3/4 மில்லி மீற்றர் ரேலர் மால், முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடிநூல் வகைகள்- போயா, வலை நூல் வகைகள்- கடற்றொழில் உபகரணங்கள் எதுவாகினும் தெரிவு செய்ய நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்;
சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர் - யாழ்ப்பாணம்


வடக்கு, கிழக்கில் பணி புரியும்

## தொண்டர் டாக்டர்கள் செப்டம்பரில் நிரந்தரமாவர்

யாழ்ப்பாணம். ஜூன் 6

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் தொண்டர் வைத்தியர்களாகக் கடமையாற்றும் 36 வைத்தியர்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் முதல் அரசாங்க நியமனம் வழங்கவிருக்கிறது.

மந்திகை, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளில் தொண்டர் வைத்தியர்களாகக் கடமையாற்றும் 24 பேருக்கும் ஏப்ரல் முதல் அரசாங்கம் சம்பளம் வழங்கிவருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 12 தொண்டர் வைத்தியர்களுக்கும் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சம்பளம் வழங்கிவருகிறது.

எதிர்வரும் செப்டம்பர் முதல் இவர்கள் அரச வைத்தியர்களாக நியமனம் பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

## 'பாஸ்' இல்லாத வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம். ஜூன் 6

''பாஸ்'' பெறாமல் ஓடிய வாகனங்கள் சில நேற்றுபடையினரால் சில இடங்களில் தடுத்து வைக்கப்பட்டன.

அனேகமான வாகனங்கள் பண்ணைப் பாலத்தடியில் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

இதேவேளை நேற்று பல இடங்களிலும் படையினர் வாகனப் ''பாஸ்'' சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்

தடுத்து வைக்கப்பட்ட வாகனங்கள் ''பாஸ்'' பெற்று வந்ததன் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## யாழ். சுகாதார வாரத்தில் இரத்த தானத்துக்கு முக்கியத்துவம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாண நகரில் அடுத்த ஜூலைமாதம் வரும் சுகாதார வாரத்தை யொட்டி இரத்த தானம் பரவலாக வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் மூன்றும் திகதி முதல் எட்டாம் திகதி வரை சுகாதார வாரம்கொண்டாடப்படவிருக்கிறது.

இறுதிநாள் அன்று இரத்த தானம் செய்யவும் இரத்த தானம் சம்பந்தமான கருத்தரங்கு நடத்தவும் ஏற்பாடாகியுள்ளன. யாழ் செஞ்சிலுவைச்சங்கம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவ மாணவிகளும் இரத்த தானம் செய்ய உள்ளனர், (ஒ-3)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் கிஷோக்

யாழ். வளாக ஒழுங்கையைச் சேர்ந்த உதயகுமார்-மஞ்சுளா தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிஷோக் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, பெரியப்பா, பெரியம்மா, பெரியமாமா, சின்னமாமா (பிரான்ஸ்), ஆசைமாமா, வசந்தா அன்ரி, திலோ அத்தை, கௌரி அத்தை, மாமா (ஜேர்மன்), கணேஸ் அத்தை மாமா (சுவிஸ்), சோதி அத்தை மாமா (டென்மார்க்), மச்சான்மார், நந்திவர்வன் (சுவிஸ்), மச்சான்மார் சந்துரு, சஞ்சீவ் [சுவிஸ்] ஜனார்த்தனன் (டென்மார்க்), மச்சாள்மார் சத்தி, துளசி, சுபா, சுவிதா, பௌஜா, துளசிகா, பிரியலக்ஷனு, அனுஷ்ப்ரியா, அண்ணன்மார், செல்வ அண்ணன், புஷ்பா அண்ணன், அக்காமார் கலா, ஜெயநாயினி, கிருபா சித்தப்பா, வேலணை தாத்தா குடும்பத்தாரும், சரவணை அம்மம்மா குடும்பத்தாரும், கொய்யாத்தோட்டம் அம்மம்மா குடும்பத்தாரும் இவரைப் புங்குடுதீவு மாரியம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[11159]


வெள்ளம், மண் சரிவினால்

## பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு உதவத் தயார் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 6

தென்பகுதியில் வெள்ளம், மண்சரிவு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய உதவியையும் அளிக்கத் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அறிவித்தார்.

பிரதமர் காந்தியின் விசேட செய்தி நேற்றுக்காலை திரு. பிரேமதாஸாவிடம் கையளிக்கப்பட்டது.

நிவாரண வேலைகளுக்குத் தேவையான ஹெலிக்கொப்டர்களையும் கொடுத்து உதவவும் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் காந்தி அறிவித்தார்.

கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்க க்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் பிரதமர் காந்தி தனது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் காந்தி உதவிகள் அளிக்க முன்வந்ததற்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா நன்றி தெரிவித்திருக்கிறார். (ஒ-எ)

150 வருட பூர்த்தியை முன்னிட்டு

## ஹாட்லிக் கல்லூரி முத்திரை நேற்று வெளியிடப்பட்டது

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வருட பூர்த்தியை முன்னிட்டு 75 சதம் பெறுமதியான ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் வைபவங்களை நேற்று கொழும்பிலும் பருத்தித்துறையிலும் இடம் பெற்றன.

கொழும்பு பிரதம தபாற் கந்தோரில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவத்தில் பிரதம தபால் அதிபர் திரு. ஈ. ராஜவசம் முதலாவது முத்திரையை ஹாட்லிக் கல்லூரி அதிபர் பொ. பாலசிங்கத்திடம் வழங்கினார்.

பருத்தித்துறையில் நடைபெற்ற வைபவத்துக்கு கல்லூரி உப அதிபர் எஸ். பானம்பலம் தலைமை வகித்தார். முதல் முத்திரையை பருத்தித்துறை பிரதம தபால் அதிபர் திரு. ஏ. கணபதிப்பிள்ளை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். ராஜேந்திரனிடம் கையளித்தார். (ஒ-9-160)

## அனேக பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை

யாழ்ப்பாணம். ஜூன 6

யாழ். நகரிலும் மற்றும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று அனேகமான பாடசாலைகள் இயங்கவில்லை.

ஒரு சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் குறைந்த அளவில் வந்திருந்தனர் என்றும் அவர்களும் அரை நேரத்துடன் சென்றுவிட்டனர் என்றும் பல இடங்களில் இருந்தும் எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் ஆனந்தராஜா கொலையுண்டதை கண்டித்த மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்டது.

இந்த பகிஷ்கரிப்பு குறித்து ஏற்கனவே துண்டுப்பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

## தலையில்லாத சடலம்

கொழும்பு, ஜூன் 6

தலையில்லாத சடலம் ஒன்று இந்துருவ என்னுமிடத்தில் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தலை காலி வீதியில், அத்துருவல பாலத்தின் கீழ் எரிந்த நிலையில்காணப்பட்டது (ஒ-எ)

### அண்மைக்கால.,..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு எத்தனை பொறுப்புள்ளதோ அதேயளவு இந்தியாவின் நலனில் இலங்கைக்கும் பொறுப்பு உண்டு.

இதே மாதிரி ஒவ்வொருவரின் பாதுகாப்பிலும் மற்றவருக்கு கடமை இருக்கிறது.

தெற்காசி மண்டலத்தில் உள்ள நாடுகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இந்த நாடுகள் அனைத்துக்கும் நன்மையளிக்கும் — என்றார். (அ-எ)

### கொழும்பு--.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சோருவதான தகவல் தெரிவிக்கப்பட்டதாம்.

இந்தியப் படையினருக்கு எதிரான ஜே. வி. பி யினரின் சுவரொட்டிகளும் கொழும்பில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

படையினரின் சோதனைகளும், ரோந்து நடவடிக்கைகளும் கொழும்பில் திடீரென அதிகரித்திருப்பதன் காரணமாக முக்கிய வீதிகளில் வாகனப் போக்குவரத்து நெருக்கடிகளும் ஏற்படுவதைக் காண முடிகிறது (அ-எ-10)

### திருமலையில்-.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தியப்படை வெளியேற்றம் குறித்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச வெளியிட்ட அறிவிப்புக்கு ஆட்சேபம் தெரிவித்து இன்று திருகோணமலையில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

### மட்டுநகரில் --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளன.

'ஈழத் தேசபக்த இயக்கம்' என்ற அமைப்பின் பெயரால் ஒட்டப்பட்ட இச் சுவரொட்டியில் கீழ்க்கண்ட வாசகங்கள் காணப்பட்டன:-

- ஸ்ரீலங்கா அரசு இந்தியப் படையை வெளியேற்றுவது ஒருதலைப்பட்சமானது, இதை மாற்று; இல்லையேல் தமிழீழம் தவிர்க்கமுடியாததாகிவிடும்.
- இந்திய அரசே! இந்தியப் படை வெளியேறுவதானால் எம் தமிழீழத்தைப் பெற்றுத் தா! அதுவே எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம்.
- இந்திய அரசே! எங்கே சமாதான ஒப்பந்தம்? எம் தேச விடுதலையே எம் நிரந்தரப் பாதுகாப்பு.
- இந்திய அரசே, எங்கே எம் தமிழ் மாநிலம்? எங்கே எமக்குப் பொலீஸ் படை?

(ஒ-21)

### புத்தூரில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வில் உள்ள நான்கு வீடுகள், தவசி நல்லதம்பி வளவில் உள்ள இரண்டு வீடுகள், சடையன் கந்தையாவின் வளவில் உள்ள இரண்டு வீடுகள், கனகன் முத்தியின் வளவில் உள்ள இரண்டு வீடுகள்.

### கொமேனிக்கு...

கள் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 8 பேர் உயிரிழந்தனர். 500 பேர் வரையில் காயமடைத்தனர்.


அ. சிவராசா விஜயலஷ்மி
அவர்களின்

## இரண்டாம் ஆண்டு நினைவுப்பா

ஆண்டு இரண்டு உருண்டு ஓடினும்
பூண்ட உன்பக்தி நெஞ்சை அறுக்குதே
மாண்புடன் நீ வாழ்ந்த வாழ்வுதான் என்னே
காண்போம் இனி எப்போ உன் நிழலை அப்பா!

— பிள்ளைகள், தாய் —

அல்வாய்.
[11174]

தகவல்: க. விஜயரட்ணம் (மருமகன்)

## மரண அறிவித்தல்

திருமதி

### சிவபாலசிங்கம் இந்திராணி

சிவபாலசிங்கம் இந்திராணி காலமாகி விட்டார். இவர் கனகரட்ணம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் செல்வராஜ [U. K], குகராஜ [U. K] தவராசா, நீலராணி, யோகராணி, ஆகியோரின், அன்புச் சகோதரரும் நவமணிதேவி, அன்னலட்சுமி, நிமலா [U. K) ஆகியோரின் மைத்துனியும், கிருஸ்ணவேணியின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைக்காக 6-6-89 இன்று பி. ப 4.00 மணியளவில்சித்துப்பாத்தி மயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. சிவபாலசிங்கம்.
(மீசை)

140, கண்டி வீதி,
அரியாலை.

[11175]

## மரண அறிவித்தல்கள்

### பரமேஸ்வரன் முரளீதரன்

[யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி, உயர்தர மாணவன்]

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் முரளீதரன் (யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்) 05-06-1989 அன்று அகால மரணமானார்.

இவர் வீரவாகு பரமேஸ்வரன் (யாழ். கல்வித் திணைக்களம்), திருஞானவதி பரமேஸ்வரன் (இளைப்பாறிய தாதி, யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், ஞானகௌரி, சுமங்கலி, பரணீதரன், நியாந்தி, (மாணவர்கள் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகரெட்ணம் செல்லம்மாவினதும், குமரக்கோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த வீரவாகு இரத்தினம்மாவினதும் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-06-1989 இன்று செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. பரமேஸ்வரன்

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

[865]

### திருமதி பாக்கியலட்சுமி ஆறுமுகம்

திருமதி பாக்கியலட்சுமி ஆறுமுகம் அவர்கள் 4-6-89 அன்று, காலமானார். இவர் காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த காலம் சென்ற மலேசியா அப்போதிக்கரி K. S. ஆறுமுகத்தின் அன்பு மனைவியாரும், காலம் சென்ற பத்மநாதன் (மலேசியா) சண்முகநாதன் (Safty Children, Colombo), பாலசிங்கம் (Field Programme-Assistant English Education Dept, N' Eliya Region), குணசிங்கம் (U. K.), குலசிங்கம் (Saudi Arabia) குமாரசிங்கம் (W. Germany), திருமதி ஜெ. சரோஜினி ஆகியோரின் அருமைத் தாயாரும், தமயந்தி பத்மநாதன் (மலேசியா), பரமேஸ்வரி சண்முகநாதன் (இளைப்பாறிய ஆசிரியை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பரமேஸ்வரி பாலசிங்கம் [ஆசிரியை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), புஸ்பா குணசிங்கம் (U. K.) ஜெகதீஸ்வரி குமாரசிங்கம், ஜெயலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், றஞ்சினி, அமரசிங்கம், பத்மினி, சாந்தினி, சந்திரசேகரம், ஆறுமுகம், ஷியாமா, சுரேஷ், ரமேஷ், சாயிஸ்கந்தன், சுபாஷினி, செந்தூரன், அமிர்தராஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலம் சென்ற சிவகுருநாதன் (மலேசியா), திருமதி தனலட்சுமி நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜதேவன் (A. Baur & Co. Ltd. Jaffna), ஜெயதேவன் (Canada), தர்மதேவன் W. Germany) திருமதி கௌரி குணநாதன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (6-6-89) பிற்பகல் 3. 30 மணியளவில் 265, நாவலர் வீதி, ஆனைப்பந்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. குலசிங்கம். (மகன்)

265, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [11170]

### வேலாயுதம் பாலச்சந்திரன்

வேலணை மேற்கைச் சேர்ந்த வேலாயுதம் பாலச்சந்திரன் (Authorised Officer for sales தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், கொழும்பு) அவர்கள் 04 - 06 - 89 அன்று காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் வேலாயுதம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற மயில்வாகனம் பாக்கியலெட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும், ரவீந்திரன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), சசிகலா (யாழ் இந்து மகளிர் கல்லூரி], பவீந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநாதன், விசாலாட்சி, ஆனந்தநாயகி, தெய்வேந்திரன் (நைஜீரியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னுச்சாமி மாணிக்கவாசகர், வலிதாம்பிகை, செல்வகுமாரி [State Bank Of India Colombo], சத்தியலெட்சுமி புஸ்பகாந்தி, பரமேஸ்வரி, வரதலெட்சுமி, அம்பிகைகுமாரன் [அம்பிகா ஸ்ரோர்ஸ் டாம்ஸ்ரீற் கொழும்பு] ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலச்சந்திரன் [சிரேஸ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்]' காலஞ்சென்ற சிவலிங்கம் (அம்பிகை குமரன் ஸ்ரோர்ஸ் டாம் ஸ்ரீற் கொழும்பு] கார்த்திகேசு [குமராசாமி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்], திருவிளங்கம் கபிலன் ரெக்ஸ் ரைல்ஸ் வேலணை] ஆகியோரின் அன்புச்சகலனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 07- 06- 89 புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
செ. பாலச்சந்திரன்.

கைத்தனை வீதி,
வேலணை மேற்கு,
வேலணை.

[11172]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 06—06—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org